2018 மார்ச் 21]

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

பிற்பகல் 12-05

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரந்தாமன் படியளந்த பாக்கியமாய், பன்மொழி வித்தகமாய், பல்கலைப் புத்தகமாய் பாரினில் அவதரித்து; திரையுலகில் கொடிகட்டிப் பறந்து; அரசியலில் புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசாய் உருவெடுத்து; புரட்சித் தலைவரின் மறைவிற்குப் பிறகு இரண்டுபட்ட இயக்கத்தை ஒன்றாக்கி, தளர்ந்துவிட்ட மனங்களையெல்லாம் தட்டி எழுப்பி; முடங்கிய இலையை மீட்டெடுத்து; ஒன்றுபட்ட இயக்கத்தை நான்கு முறை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியதோடு, தேசிய அளவில் மூன்றாவது பேரியக்கமாக உருவெடுக்கச் செய்து; ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளி விளக்காய், அடித்தட்டு மக்களின் ஆனந்தக் காற்றாய், நலிந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய் விளங்கியதோடு, குடிசையில் அகல் விளக்காக இருந்த என்னை இமயத்தில் ஏற்றி வைத்த தீபமாக மாற்றிய மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதையில் பயணிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016-2018 ஆம் ஆண்டுகளுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.